<u>சாதாரணக் கூட்டம்</u>

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி சாதாரணக் கூட்டம் 28.06.2024 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட உள்ளதால், துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>முன்னிலை :-</u>

**திரு.அ.அறிவரசு** அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி

**<u>பொருள் எண்:01</u>**

கூடலூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் தெருக்களின் இரு புறங்களிலும் உள்ள செடி, கொடிகள் மற்றும் புற்களை அகற்ற தேவைப்படும் 3 - எண்ணம் புல்கட்டிங் கருவிகளை 2024-2025ம் ஆண்டிற்கு வாங்கி பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/-(ஐம்பது ஆயிரம்)-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1201/2024/எச்1)**

**<u>பொருள் எண்:02</u>**

கூடலூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் புல் கட்டிங் கருவி மற்றும் புகை மருந்து அடிக்கும் கருவிகள் தினசரி பயன்படுத்தப்பட்டு வரும் காரணத்தினால், பழுதுகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், மேலும், பொதுசுகாதார நலன் கருதி இப்பழுதுகளை உடனே சரி செய்து பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி ஏற்படக்கூடிய பழுதுகளை சரிசெய்ய 2024-25ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்)த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1200/2024/எச்1)**

**பொருள் எண்:03**

கடலூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசுப் புழு தடுப்புப் பணிகளை மேற்கொள்ள 52 DBC பணியாளர்களை கொண்டு பணியினை மேற்கொள்ள திரு.செபஸ்திராஜ் மாணிக்கம் அவர்களுக்கு கடந்த ஏப்ரல்-2024 முதல் ஜூன்2024 வரை பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டு வந்த நிலையில் அவரது ஒப்பந்த பணிக்காலம் முடிவடைய இருப்பதால், மேலும், மூன்று மாத காலம் (86 பணி நாட்கள்) ஜூலை-2024 முதல் செப்டம்பர்-2024 வரை கால நீட்டிப்பு வழங்கிடவும், மேலும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.32.75 இலட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1622/2023/எச்1)**

**பொருள் எண்:04**

கடலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாகவும், மேலும் அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் அனைத்து அரசு நலத்திட்டங்களையும் பொதுமக்களுக்கு சென்றடையும் விதமாக பேனர்கள், போஸ்டர்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை அச்சிட வேண்டியுள்ளதாலும், அவ்வப்போது அவற்றினை அச்சிட 2024-2025ம் ஆண்டிற்கு தேவையான பேனர்கள், போஸ்டர்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை அச்சிட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/-(ஒரு இலட்சம்)-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1202/2024/எச்1)**

**பொருள் எண்:05**

கடலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு முதிர் கொசுப் புழு ஒழிப்பு பணிகளுக்கு வீடு வீடாக அபேட் மருந்து தெளிக்கவும், மேலும் புகை மருந்து அடிக்கவும் தேவைப்படும் அபேட், பைரத்திரம் மற்றும் மாலத்தியான் இருப்பு குறைவாக உள்ள காரணத்தினாலும், மேலும் கழிவுநீர் கால்வாய்களில் கொசுக்களை கட்டுப்படுத்த சாக்கடை மருந்து மற்றும் மருந்து தெளிப்பான் இருப்பு இல்லாத காரணத்தினாலும் மேற்கண்ட பொருட்களை 2024-2025ஆம் நிதியாண்டிற்கு வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவுத் தொகைரூ.10,00,000/-(பத்து இலட்சம்)-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1203/2024/எச்1)**

**பொருள் எண்:06**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களுக்கு 2024-2025ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்களிப்பு தொகை ரூ.30,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1375/2023/பி1)**

**பொருள் எண்:07**

கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் கோடை காலத்தில் நிலவிய வெப்பத்தாலும், கடும் வறட்சியினாலும் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்தும் பொருட்டு, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்பு பேனர்கள் மற்றும் டோக்கன் ஸ்டிக்கர்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, இப்பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக விழிப்பு பேனர்கள் மற்றும் டோக்கன் ஸ்டிக்கர் ஆகியன கிருஷ்ணா பிளக்ஸ் பிரிண்டிங் என்ற நிறுவனத்தின் மூலம் அச்சிடப்பட்டது. இதற்கான பட்டியல் தொகை ரூ.17,380/-யை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து கிருஷ்ணா பிளக்ஸ் பிரிண்டிங் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. கோடை காலத்தில் நிலவிய தண்ணீர் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததால், இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காண் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.782/2024/இ1)**

**பொருள் எண்:08**

கடலூர் நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.1169, 1169/1 பட்டா எண்.8964, 1788 வட்டப்பாறை மேடு பகுதியில் சாலையோரத்தில் உள்ள மிகப்பெரிய குழி ஒன்று பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக உள்ளதால், அதனை கட்டிட இடிபாடுகளை கொண்டு நிரப்பி சரிசெய்து பூங்கா அமைத்து சாலை அமைக்க அனுமதி வழங்கக் கோரி திரு.கோவை ரமேஷ் என்பவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி, மேற்காணும் இடத்தில் உள்ள குழியினை கட்டிட இடிபாடுகளை கொண்டு நிரப்பி, சரிசெய்து பூங்கா அமைக்க விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1204 /2024/இ1)**

**பொருள் எண்:09**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 பழையபுதூர் பகுதியில் உள்ள கிணறானது திறந்த நிலையில் இருப்பதால், பறவைகள் மற்றும் விலங்கினங்கள் கிணற்றில் விழும் அபாயம் உள்ளதால், அதற்கு மூடி அமைக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ரூ.2.00இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பணியை மேற்கொள்ளவும், இதற்கான செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 953 /2024/இ1)**

**பொருள் எண்:10**

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் கடித ந.க.எண்.288/செ.ம.தொ.அ./2024, நாள்.18.03.2024 கடிதத்தில், நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் 100 சதவீத வாக்குப் பதிவு இலக்கினை எய்திட, பொதுமக்கள் அன்றாடம் சென்று' வரும் அரசு அலுவலகங்களாக உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ஒப்புதல் பெற்ற வாக்காளர் விழிப்புணர்வு பதாகைகள் வைத்து விழிப்புணர்வு பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவிடும் தொகையினை உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேர்தல் அவசர அவசியம் கருதி, இந்நகராட்சியில் விளம்பர பதாகைகள் அச்சிட்டு விநியோகம் செய்ய ரூ.12,000/-

மதிப்பில் விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

தேர்தல் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.669/2024/இ1)**

**பொருள் எண்:11**

கூடலூர் நகராட்சிக்கு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்த 10 எண்ணிக்கையில் விளம்பர பதாகைகள்(அளவு - 3 x 2 அடி) அச்சிட்டு விநியோகம் செய்தல் பணிக்கு 03.04.2024 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருள் | அலகு | VK Ads. Coimbatore | Brand Media. Coimbatore | VK Ads. Coimbatore |
|---|---|---|---|---|---|
| 1 | Lok Sabha Election Awareness-2024 5mm Form Board Printing | 10 nos | 10620 | 11710 | 11800 |
| | **மொத்தம்** | . | 10620 | 11710 | 11800 |

மேற்காணும் விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள VK Ads. கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு தேர்தல் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், மேற்காண் பணிக்கு செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.669 /2024/இ1)**

**பொருள் எண்:12**

சூடலூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில் இடங்களில் புதியதாக தெருவிளக்குகள் அமைப்பதற்கும் மற்றும் பழுது பார்த்தல் பணிக்கும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்குறிப்பிட்ட செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1244 /2024/இ1)**

**பொருள் எண்:13**

கூடுதல் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், 111 - மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி மற்றும் வட்டாட்சியர், மேட்டுப்பாளையம் அவர்களின் கடித ந.க.எண்.594/2024/அ6, நாள்.14.03.2024ன் படி, அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் நடைபெறும் நாளன்று சாமியாணா பந்தல் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் உள்ள மொத்தம் 40 வாக்குச்சாவடி மையங்கள் கீழ்க்காணும் இடங்களில் அமைந்துள்ளது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மொத்த வாக்குச்சாவடிகள் |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி, செல்வபுரம். | 2 |
| 2 | கூடலூர் நகராட்சி ஆரம்பப்பள்ளி, திருமலைநாயக்கன்பாளையம். | 6 |
| 3 | கூடலூர் நகராட்சி துவக்கப்பள்ளி, திருமலைநாயக்கன்பாளையம், அங்கன்வாடி மையம் | 1 |
| 4 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி, சாமிசெட்டிபாளையம். | 7 |
| 5 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கூ.கவுண்டம்பாளையம். | 4 |
| 6 | ஜி.எஸ்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி | 7 |
| 7 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, புதுப்புதூர். | 2 |

| | | |
|---|---|---|
| 8 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி,<br>தேவையம்பாளையம். | 1 |
| 9 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, பழைய புதூர். | 3 |
| 10 | கிளை நூலகம், பழையபுதூர் | 1 |
| 11 | ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி | 2 |
| 12 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி,<br>தெக்குப்பாளையம். | 2 |
| 13 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி,<br>தெக்குப்பாளையம்,<br>அங்கன்வாடி மையக் கட்டிடம் | 1 |
| 14 | கூடலூர் நகராட்சி ஆரம்பப்பள்ளி,<br>இராவுத்தக்கொல்லனூர். | 1 |
| | **மொத்தம்** | **40** |

எனவே, மேற்கண்ட 14 இடங்களில் தேர்தல் அவசர அவசியம் கருதி, சாமியாணா பந்தல் அமைக்கவும், மின்விசிறி, மின் விளக்கு, மேஜை, நாற்காலி மற்றும் குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 669/2024/இ1)**

**பொருள் எண்:14**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் சாமியாணா பந்தல் அமைத்தல், மின்விசிறி, மின் விளக்கு, மேஜை, நாற்காலி மற்றும் குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் பணிக்கு 25.03.2024 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி / பொருள் விபரம் | எண்ணிக்கை | ஸ்ரீ ராகவேந்திரா சவுண்ட் சர்வீஸ் & பர்னிச்சர்ஸ், கோயம்புத்தூர் | ஜெ.ஆர்.பந்தல் நிலையம், கோயம்புத்தூர் | பாலு சவுண்ட் சர்வீஸ் & பி.எஸ். வினு பர்னிச்சர்ஸ், கோயம்புத்தூர் |
|---|---|---|---|---|---|
| 1 | மின் விளக்கு (Tube Light) | 200 | 62 | 60 | 65 |
| 2 | மின் விசிறி (Fan) | 50 | 400 | 375 | 400 |
| 3 | நாற்காலி (Chair) | 500 | 7 | 7 | 8 |
| 4 | மேஜை (Table) | 200 | 75 | 70 | 80 |
| 5 | சாமியானா பந்தல் Tent (15 x20) | 12 | 1325 | 1300 | 1350 |
| 6 | சாமியானா பந்தல் Tent (15 x30) | 10 | 1550 | 1500 | 1600 |
| 7 | 20 லிட்டர் தண்ணீர் கேன் | 180 | 62 | 60 | 65 |

மேற்காணும் விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் ஜெ.ஆர்.பந்தல் நிலையம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு தேர்தல் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், ரூ.1,74,675/- செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.869 /2024/இ1)**

**பொருள் எண்:15**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-2024ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 19.03.2024 அன்று கோரப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள்(MCC) அமுலில் இருந்ததால், இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 06.06.2024 அன்று திறக்கப்பட்டு, ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்த விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ எ ண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ஸ்ரீ பாரதி நகர் முதல் கட்டாரூசி மலை மெயின் சாலையில் சிமெண்ட் குழாய் பாலம் அமைத்தல். | 4.50 | திரு. வ.முருகேசன் | 0.18% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.12% அதிகம் |
| 2. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ஸ்ரீ பாரதி நகர் பகுதியில் பொதுக்கழிப்பிடம் முதல் ஸ்ரீ பாரதி நகர் மெயின் சாலை வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 5.00 | திரு. வ.முருகேசன் | 0.15% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.17% அதிகம் |
| 3. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ஸ்ரீ பாரதி நகர் இரண்டாம் வீதி மெயின் சாலை முதல் மூன்றாம் வீதி வரை மற்றும் பொதுக்கழிப்பிடம் முன்புறம் மழைநீர் வடிகால் அமைத்தல். | 7.50 | திரு. வ.முருகேசன் | 0.16% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.85% அதிகம் |
| 4. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 ஜே.ஜே. மாநகர் முதல் குப்புசாமி நகர் மெயின் சாலை வரை வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 8.80 | திரு.டி.ராஜ் குமார் | 0.14 % குறைவு |
| | | | திருமதி. வி.ஆர்.ஜெயந்தி | 2.20% அதிகம் |
| 5. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 சாமிசெட்டிபாளையம் ஏழு வீடு வீதி மற்றும் நேரு நகர் விநாயகர் கோவில் முதல் நூலகம் வரை வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 8.30 | திரு.டி.ராஜ் குமார் | 0.09% குறைவு |
| | | | திருமதி. வி.ஆர்.ஜெயந்தி | 1.40% அதிகம் |
| 6. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 கணேசபுரம் முதல் நேரு நகர் மெயின்சாலை வரை மற்றும் கணேசபுரம் குறுக்கு சாலைகளில் மூடியுடன் கூடிய வடிகால் அமைத்தல். | 8.30 | திரு.டி.ராஜ் குமார் | 0.10% குறைவு |
| | | | திருமதி. வி.ஆர்.ஜெயந்தி | 1.26% அதிகம் |
| 7. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 கணேசபுரம் பகுதியில் சிறுபாலங்கள் அமைத்தல். | 9.80 | திரு.டி.ராஜ் குமார் | 0.20% குறைவு |
| | | | திருமதி. வி.ஆர்.ஜெயந்தி | 1.36% அதிகம் |
| 8. | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 ஜே.ஜே மாநகர் முதல் வீதியில் சிமெண்ட் சாலை மற்றும் குழாய் பதித்தல். | 6.00 | திரு.டி.ராஜ் குமார் | 0.17% குறைவு |
| | | | திருமதி. வி.ஆர்.ஜெயந்தி | 1.56% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 380/2024/இ1)**

**பொருள் எண்:16**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-2024ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 19.03.2024 அன்று கோரப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள்(MCC) அமுலில் இருந்ததால், இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 06.06.2024 அன்று திறக்கப்பட்டு, ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்த விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எ ண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில் பழுதான தெருவிளக்குகளில் பழுதுகளை சரிசெய்தல். | 5.00 | தி/வா இலக்கியன் அசோசியேட்ஸ் | 0.13% குறைவு |
| | | | திரு.வ.முருகேசன் | 1.35% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா இலக்கியன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.198 /2024/இ1)**

**பொருள் எண்:17**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-2024ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 22.03.2024 அன்று கோரப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள்(MCC) அமுலில் இருந்ததால், இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 06.06.2024 அன்று திறக்கப்பட்டு, ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்த விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 சாரங்க நகர் சமுதாயக் கழிப்பிடம் முதல் வார்டு எண்.05 குப்புசாமி நகர் வரை DBM பணி செய்தல். | 9.60 | திரு. வ.முருகேசன் | 0.12% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.17% அதிகம் |
| 2. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 குப்புசாமி நகர் முதல் வார்டு எண்.06 கற்பூர நகர் வரை DBM பணி செய்தல். | 9.60 | திரு. வ.முருகேசன் | 0.10% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.19% அதிகம் |
| 3. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 கற்பூர நகர் முதல் திருமலைநாயக்கன் பாளையம் - செல்வபுரம் மெயின் சாலை வரை DBM பணி செய்தல். | 9.60 | திரு. வ.முருகேசன் | 0.11% குறைவு |
| | | | திரு.எஸ்.விஜய குமார் | 1.42% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்காண் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.405/2024/இ1)**

**பொருள் எண்:18**

கூடலூர் நகராட்சியில் குடிநீர்நிதி 2023-2024ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 19.03.2024 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில் ஆழ்குழாய் கிணறுகளில் மின் மோட்டார் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பேனல் போர்டுகளை மாற்றியமைத்தல். | 5.00 | தி/வா இலக்கியன் அசோசியேட்ஸ் | 0.15% குறைவு |
| | | | திரு.வ.முருகேசன் | 1.50% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா இலக்கியன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்காண் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 475/2024/இ1)**

**பொருள் எண்:19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7121/2023/மாதி3 நாள்.05.04.2024, அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2972/general I /2024-1, நாள்.10.04.2024 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.1537/2023/பி1 நாள்.12.04.2024ன் படி கோடை காலத்தில் அனல் காற்றின் தாக்கம் அதிகமாக இருந்ததால், அதனால் ஏற்படும் பாதிப்பில் இருந்து பொதுமக்களை காத்துக்கொள்ளும் பொருட்டு, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் பந்தல் அமைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே, கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 கோவை - மேட்டுப்பாளையம் சாலையில் லட்சுமி தியேட்டர் அருகில் தண்ணீர் பந்தல் அமைத்தல் பணியானது உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதி 57(7)-ன் கீழ் ரூ.30,000/- மதிப்பீட்டில் விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதி 57(7)-ன் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 782/2024/இ1)**

**பொருள் எண்:20**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 கோவை - மேட்டுப்பாளையம் சாலையில் லட்சுமி தியேட்டர் அருகில் தண்ணீர் பந்தல் அமைத்தல் பணிக்கு 18.04.2024 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி / பொருள் விபரம் | அலகு | அமுதா பந்தல் நிலையம் | SRN பந்தல் & டெக்கரேசன் | மோனி பந்தல் நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | பந்தல் | 1 | 18000 | 18500 | 18800 |
| 2 | Syntax Tank (500 ltr) | 1 | 5000 | 5200 | 5300 |
| 3 | Plastic Water Dispenser Jar | 2 | 500 | 540 | 560 |
| 4 | Water containter | 1 | 900 | 950 | 1000 |
| 5 | Tumbler | 2 | 150 | 160 | 170 |
| 6 | Banner (1x500) | 1 | 500 | 550 | 580 |
| | Total | | **25050** | **25900** | **26410** |

மேற்காணும் விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் அமுதா பந்தல் நிலையம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

கோடை காலத்தில் நிலவும் வறட்சியை கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் நலன் கருதியும் இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.782/2024/இ1)**

**பொருள் எண்:21**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10 சாய் கார்டன் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றை இயக்கி தண்ணீர் விநியோகம் செய்ய, மின் இணைப்பு தேவைப்படுவதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.30,000/- நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 782/2024/இ1)**

**பொருள் எண்:22**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 அஜந்தா நகர் மற்றும் வி.கே. நகர் பகுதியில் தெருவிளக்கு வசதி இல்லாததால், பொதுமக்களின் அவசர அவசியம் கருதி புதியதாக தெருவிளக்குகள் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1240 /2024/இ1)**

**பொருள் எண்:23**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.503/1 மற்றும் 505 நெகாலையில் உள்ள புலங்களுக்கு இடையே உள்ள ஓடையில் அணுகுபாலம் அமைத்து தருமாறு திரு.எ.ராஜேந்திரன், கோயம்புத்தூர் என்பவர் மூலம் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்காண் விண்ணப்பம் குறித்து நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் இடம் நேராய்வு செய்யப்பட்டதில், விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடமானது சமநிலப்பரப்பாக உள்ளதால், இவ்விடத்தில் அணுகுபாலம் தேவையில்லை. மேற்காண் விண்ணப்பதாரரின் கோரிக்கை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்காண் விண்ணப்பம் குறித்து நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் இடம் நேராய்வு செய்யப்பட்டதில், விண்ணப்பத்தில்

குறிப்பிட்ட இடமானது சமநிலப்பரப்பாக உள்ளதால், அணுகுபாதை தேவையில்லை என மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.1247 /2024/இ1)**

**பொருள் எண்:24**

கடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த 2 LCV வாகனங்கள் மற்றும் புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட 8 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் ஆகியவற்றினை கண்காணிக்க ஏதுவாக GPS System பொருத்த வேண்டியுள்ளதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி Real Tech GPS என்ற நிறுவனத்தின் மூலம் GPS கருவிகள் பொருத்தப்பட்டு, பட்டியல் தொகை ரூ.53100/- பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1248 /2024/இ1)**

**பொருள் எண்:25**

கடலூர் நகராட்சியில் அலுவலக முதல் தளத்தில் அமைந்துள்ள மன்ற கூட்ட அரங்கிற்கு மேடை அமைத்தல், வண்ணப்பூச்சு பணிகள் மேற்கொள்ளுதல், குளிர்சாதன வசதி மற்றும் மன்ற கூட்ட அரங்கிற்கு அருகில் துப்புரவு ஆய்வாளருக்கு அறை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1241 /2024/இ1)**

**பொருள் எண்:26**

பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் கோவை- மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால், பேருந்து போக்குவரத்துகள் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 கற்பூர நகர் முதல் திருமலை நாயக்கன்பாளையம் செல்லும் சாலை வழியாக திருப்பி விடப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் செல்லும் அனைத்து போக்குவரத்துகளும் இச்சாலையை பயன்படுத்தப்பட்டு வருவதால், இச்சாலையானது சேதமடைந்துள்ளது. எனவே, அதிகமாக சேதமடைந்துள்ள பகுதியில் GSB, Wetmix பணிகள், தாங்குசுவர் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, இப்பணியை மேற்கொள்ள ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 534 /2024/இ1)**

**பொருள் எண்:27**

கூடலூர் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-24 (Un Tied Grant)-ன் கீழ் ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட விஜய நகர், ராஜு நகர், கணேசபுரம் மற்றும் முல்லை நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்பாடு செய்தல் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/இன-2 நாள்.29.01.2024ன் படி அனுமதி வழங்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 சரஸ்வதி நகர் பகுதியில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால், பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி, மேற்காண் 15வது நிதிக்குழு மான்யத்தில் தேர்வு செய்யப்பட்ட விஜய நகர் மற்றும் ராஜு நகர் பகுதியில் அமைக்க வேண்டிய

சாலைக்குப் பதிலாக வார்டு எண்.03 சரஸ்வதி நகர் பகுதியில் தார்சாலை மேம்பாடு செய்தல் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.411/2022/இ1)**

**பொருள் எண்:28**

உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், 19 நீலகிரி பாராளுமன்ற தொகுதியை உள்ளடக்கிய 111 மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.800/2024/கீ10 நாள்.17.03.2024ல் தெரிவித்துள்ளபடி, கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வாக்குச்சாவடிகளில் சாய்தளம், கைப்பிடி அமைத்தல், குடிநீர் வசதி, மின்பணிகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய அடிப்படை வசதிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது.

| வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி ஆரம்பப்பள்ளி, திருமலைநாயக்கன்பாளையம். |
| 2 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி, சாமிசெட்டிபாளையம். |
| 3 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, புதுப்புதூர். |
| 4 | கிளை நூலகம், பழையபுதூர் |
| 5 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, தெக்குப்பாளையம். |
| 6 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, தெக்குப்பாளையம், அங்கன்வாடி மையக் கட்டிடம் |
| 7 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி, செல்வபுரம். |
| 8 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கூ.கவுண்டம்பாளையம். |
| 9 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, தேவையம்பாளையம். |

எனவே, தேர்தல் அவசர அவசியம் கருதி மேற்காண் வாக்குச்சாவடிகளில் சாய்தளம், கைப்பிடி அமைத்தல், குடிநீர் வசதி, மின்பணிகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.3.40 இலட்சத்தில் 28.03.2024 அன்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள்

மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 669/2024/இ1)**

**பொருள் எண்:29**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் சாய்தளம், கைப்பிடி அமைத்தல், குடிநீர் வசதி, மின்பணிகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 28.03.2024 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் சாய்தளம், கைப்பிடி அமைத்தல், குடிநீர் வசதி, மின்பணிகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். | 3.40 | திரு.ர.ஞானம் | 0.01% குறைவு |
| | | | கனலி கன்ஸ்டிரக்சன்ஸ் | 21.13% அதிகம் |
| | | | திரு.வ.முருகேஷ் | 9.36 % அதிகம் |

மேற்காணும் விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ர.ஞானம் என்பவருக்கு தேர்தல் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், ரூ.3,17,507/- செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.669 /2024/இ1)**

**பொருள் எண்:30**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில் குடிநீர்க்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யத் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் நகராட்சியின் குடிநீர்நிதியில் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்குறிப்பிட்ட செலவினம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1243 /2024/இ1)**

**பொருள் எண்:31**

கூடலூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அலுவலகப் பணி மற்றும் பயிற்சி நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கான பயணப்படி (TA Bill) 2024-25ஆம் நிதியாண்டிற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.0893 /2024/பி1)**

**பொருள் எண்:32**

கூடலூர் நகராட்சி (கோவை) 2023-2024ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1290 /2024/சி1)**

**பொருள் எண்:33**

கூடலூர் நகராட்சியில் கடந்த 10 ஆண்டுகளாக (2014 முதல் 2024) வருமான வரி பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி 10 ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட வருமான தொகையை ஒத்திசைவு செய்து ஈடுசெய்து கொடுத்த S.V Consultant என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பட்டியல் எண் மற்றும் நாள் | நிதியாண்டு | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | 36 / 22.04.2024 | 2023-24 26Q4 | 1760 |
| 2. | 34 / 18.04.2024 | 2014-15 26Q3 | 1059 |
| 3. | 17 / 06.04.2024 | 2017-18 26Q3 | 959 |
| 4. | 37 / 23.04.2024 | 2014-15 26Q4, 2015-16 26Q1, 2017-18 26Q4 | 3177 |
| 5. | 3 / 02.04.2024 | File Coversion, Uploading and Filing charges | 1800 |
| 6. | 07 / 03.04.2024 | | 16200 |
| 7. | 16 / 05.04.2024 | | 24300 |
| 8. | 9 / 04.04.2024 | | 11700 |
| | | **மொத்தம்** | **60,955** |

மேற்காண் செலவுத் தொகை ரூ.60,955/-ஐ நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1179 /2024/பி1)**

**<u>பொருள் எண்:34</u>**

கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி மூலம் அனுமதி பெறாத அனைத்து பெயர்ப்பலகைகள் மற்றும் பேனர்கள் ஆகியவற்றை நகராட்சி மூலம் அகற்றவும், நகராட்சியின் பொது இடங்கள், கிணறுகள் போன்றவற்றின் அருகிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.819/2024/எப்1)**

**பொருள் எண்:35**

கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரத்தில் ஆக்கிரமிப்பு செய்து வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு வருவாய்த் துறை மூலம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இலவச வீட்டு மனைப் பட்டா பெற்ற பிறகும் அவர்கள் ஏற்கனவே குடியிருந்த பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருந்தால், அவற்றை அகற்றிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(நக.எண். 1032 /2024/எப்1)**

**பொருள் எண்:36**

கடலூர் இரண்டாம் நிலை நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் மற்றும் சுமார் 15500 குடியிருப்புகளும் உள்ளன. 2011ஆம் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 38859 மக்கள் தொகையும், தற்போது சுமார் 52842 மக்கள் தொகையும் உள்ளன. இந்நகராட்சியில் மொத்தம் 12259 குடிநீர்க்குழாய் இணைப்புகள் உள்ளன. மேற்படி இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் மின் மோட்டார் இயக்கி குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் நகராட்சியில் அவ்வப்போது குடிநீர்க்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 42 பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொறியியல் பிரிவில் உள்ள களப்பணிகளை தினசரி கண்காணிக்கவும் மற்றும் புதியதாக பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கை தயார் செய்யவும் 3 தொழில் நுட்ப உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் ஆகியோரின் ஈப்பு வாகனங்களை இயக்குவதற்கு 3 ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். மேலும், பொதுப்பிரிவு, வருவாய்ப் பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளுக்கு 4 தரவு உள்ளீட்டாளர்கள் (Data Entry Operator) தேவைப்படுகின்றனர். ஆக மொத்தம் 52 பணியாளர்களைக் கொண்டு 55 நாட்களுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணிகள் மேற்கொள்ள ரூ.24.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், இச்செலவினம் குடிநீர்நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்குறிப்பிட்ட செலவினம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1348 /2024/இ1)**

**நகர்மன்ற தலைவர்**
**கூடலூர் நகராட்சி**
**கோயம்புத்தூர்-47**

**28.06.2024 அன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

| பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 முதல் 22 முடிய | 608 முதல் 629 முடிய | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 23 | 630 | பொறியாளர்கள் மூலம் கள ஆய்வு செய்ததில் சமநிலப்பரப்பாக உள்ளதால், மேற்படி இடத்தில் அனுகு பாலம் அமைக்க வேண்டியது இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| 24 முதல் 31 முடிய | 631 முதல் 638 முடிய | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 32 | 639 | பார்வையிட்டு அங்கீகரிக்கப் படுகிறது. |
| 33 முதல் 35 முடிய | 640 முதல் 642 முடிய | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 36 | 643 | அனுமதித்து அங்கீகரிக்கப் படுகிறது. |

ஒம் / திரு.அ.அறிவரசு,
தலைவர்
கூடலூர் நகர்மன்றம்
கோயம்புத்தூர்.

//உண்மை நகல் //

28/6/24

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்-47

28.6.2024